2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு"

என்று சொன்னார் வள்ளுவர். காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகிறவர்களுக்கு தேவையானவையும் நீங்காமல் நிலைத்திருக்க வேண்டிய பண்புகளாகும் என்கிற வள்ளுவரின் கூற்றின்படி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை தமிழக அரசு சிறப்போடு நிறைவேற்றி வருகிறது. நல்லவர்களால்தான் நல்லாட்சி தர முடியும் என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கூறியதைப்போல தமிழகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்று நமக்கெல்லாம் வழிகாட்டிய அம்மா அவர்கள் வழியிலே இன்றைக்கு நல்லாட்சி நடந்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதை விட்டு மறையவில்லை. அலெக்சாண்டரைப்போல வீரத்தையும், இயேசுவைப்போல அன்பையும், புத்தரைப்போல ஞானத்தையும், காந்தியைப் போன்ற சமூக மனிதநேய ஒற்றுமையையும் ஒருங்கே அமையப் பெற்றவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மடங்கா வீரமும், அடங்கா ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற அம்மா அவர்கள் இன்றைக்கு நம்மிடத்தில் இல்லை. காலத்தை வென்றவர், காவியமானவர், வேதனை தீர்த்தவர், விழிகளில் நிறைந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலத்தை வென்று கலங்கரை விளக்கமாக விளங்குவதே வரலாறு. பூக்கும் மலர்கள் எல்லாம் பூஜைக்குப் போவதில்லை. பூமியில் பிறந்தவர்கள் எல்லாம் புதிய வரலாறு படைக்க முடிவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நிரந்தரமானவர். அழிவதில்லை. எந்த நிலையிலும் அம்மா அவர்களுக்கு மரணமில்லை.

8. அறிவிப்பு

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தில் பணியாற்ற 3 சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு

கோரிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியைத் தொடரும்வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்கள் வேட்புத் தாளினை 20–3–2018 செவ்வாய்க்கிழமை பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 21–3–2018 புதன்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21–3–2018 அன்று புதன்கிழமை பிற்பகல் 5–00 மணிக்குள் தங்களது வேட்புத் தாளினைத் திரும்பப் பெறலாம். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்நாளோடு அவ்வாரியத்தில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும். செல்லத்தக்க வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் அவ்வாரியத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

7. வரவு-செலவுத் திட்டம், 2018–2019, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய உரையைத் தொடரலாம்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் என்றைக்கும் நிரந்தரமானவர். அம்மா அவர்களுக்கு எந்த நிலையிலும் மரணமில்லை. அம்மா அவர்கள் இன்றைக்கும் மக்களுடைய எண்ணங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மறைவுக்குப் பின்னாலே கொட்டிக் கிடந்த செங்கற்குவியலாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தனது அறிவாற்றலாலும், சலியாத உழைப்பாலும் மாளிகையாகக் கட்டி எழுப்பியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.